
பக்கங்கள்:-18

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 04 | வெள்ளிக்கிழமை | 17.01.2025 | அதிர்வு 168 |
|---|---|---|---|---|---|

## இந்தியத் தூதருடன் நாமல் எம்.பி. பேச்சு



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந் தோஷ் ஜா,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தேசிய 05



# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுர அரசைத் தோற்கடிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

**“வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். இதனை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம். இந்தத் தேர்தலில் அநுர அரசைத் தோல்வியடையச் செய்வோம்.”**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.** 05

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு அநுர அரசாங்கம் முடிவு கட்டியே தீரும்



## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்தாவிட்டால் குடும்பத்துடன் கடலில் குதித்து உயிரைத் துறப்போம் என்று இலங்கையின் வடக்கு மாகாண மீனவர்கள் தெரிவிக்கின்ற அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.”

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆதங்கம் வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு இடங்களுக்கும் சென்று கடற்றொழிலாளர்களைச் சந்தித்து 05




பிள்ளையார் கல்யாணம் போல நாளை, நாளை என்று இழுபட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இப்போது நடைபெறுவது பெரும்பாலும் உறுதியாகி வருகிறது.

வரும் தமிழ் – சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர், அதாவது அடுத்த 85 நாள்களுக்குள், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எப்படியும் நடந்துவிடும் என்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் சமன் சிறி ரத்னாயகா உறுதி தெரிவித்திருக்கிறார்.

2023 முற்பகுதியில் நடைபெற்றிருக்க வேண்டிய இந்தத் தேர்தல் இரண்டு ஆண்டுகள் தள்ளிப்போய், இப்போது தாமதித்து நடப்பதற்கு காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

இந்தத் தேர்தல் 2023 முற்பகுதியில் அறிவிக்கப்பட்டு, வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டு, வாக்குச் சீட்டுகளும் பகுதி அளவில் அச்சிடப்பட்ட நிலையில், நிதியமைச்சராகவும் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தத் 05






# யாழில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள், அனைவருக்கும் சமமான வேலைவாய்ப்பை வழங்கக் கோரி நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபியிலிருந்து ஆரம்பமாகிய கவனவீர்ப்புப் பேரணி, தபால் கந்தோர் வீதியூடாக யாழ். பஸ் நிலையத்தைச் சென்றடைந்தது.

இதன்போது கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள், பட்டதாரிகள் அணியும் உடைகளை அணிந்தவாறும், பட்டதாரிகள் கூலித் தொழிலில் ஈடுபடுவதைச் சித்தரிக்கும் வகையிலும் விசித்திரமாகக் காணப்பட்டனர்.

யாழ். நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள், அதனைத் தொடர்ந்து ஆளுநர் அலுவலகம் வரை பேரணியாகச் சென்றனர்.

அங்கு “எங்களுக்கு வேலை வேண்டும், வேலை வேண்டும்” எனக் கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது.















# சீனா - இந்தியா உறவில் சமநிலை பேணுவது இலங்கை அரசாங்கத்துக்குப் பாரிய சவாலானது

## ஜனாதிபதியின் சீன விஜயம் தொடர்பில் சுமந்திரன் கருத்து




(எஸ்.ரகுதீஸ்)

"சீனா, இந்தியா ஆகிய இரண்டு வல்லரசுகளையும் சமநிலையாகக் கொண்டுசெல்வது இலங்கை அரசாங்கத்துக்குச் சவாலுக்குரிய விடயமாகும். ஆகவே, இந்த அரசாங்கம் அதனை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.""

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது ஜனாதிபதியின் சீன விஜயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய ஆட்சியாளர்கள் இடதுசாரிக் கொள்கையை உடையவர்கள். ஆகவே, சீனாவுடன் அல்லது பொதுவுடைமை தத்துவத்தை வைத்திருக்கின்ற நாடுகளுடன் அவர்கள் தொடர்புகளை வைத்திருப்பது புதிய விடயம் அல்ல.

அதேவேளை, மிகவும் அண்மைய நாடாக இருக்கும் இந்தியாவுடன் நிச்சயம் நெருக்கமான தொடர்பு பேணப்பட வேண்டும். இந்நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முதலிலே இந்தியாவுக்குச் சென்று வந்துள்ளார். ஆகவே, இந்தியாவுடன் நல்ல உறவைப் பேணுவதற்கான சமிக்ஞை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளையில், தங்களுடைய பொருளாதாரக் கொள்கையுடன் இணங்கிச் செயற்படுவதாகக் கருதுகின்ற சீனா அரசாங்கத்துடனும் அநுர தரப்பினர் தொடர்புகளைப் பேணுகின்றனர். இந்த இரண்டு தொடர்பாடல்களையும் எந்தவகையில் கொண்டு செல்லப் போகின்றார்கள் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஏனென்றால், இந்தியாவும் சீனாவும் நட்பு நாடுகள் அல்ல. அந்தப் பூகோள உண்மையும் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியும். ஆகவே, நட்பு நாடுகளாக இல்லாத இரண்டு வல்லரசு நாடுகளுடன் சம தூரத்தில் இருந்து, சமநிலையாகக் கொண்டு செல்வது சவாலுக்குரிய விடயமாகும். எனவே, இந்த அரசாங்கம் அதனை எவ்வாறு கையாளப் போகின்றது என்பதை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்." - என்றார்.

# துள்ளாதீர்! அடக்கி வாசி!! இது சிங்கள பௌத்த நாடு!!!

## கஜேந்திரகுமாருக்கு மேர்வின் எச்சரிக்கை



"இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடாகும். எனவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் இங்கு துள்ளக்கூடாது."

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை என்பது சிங்கள தேசமாகும். வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என ஒருவர் இருக்கின்றார். அவர் பௌத்த சாசனத்துக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புகின்றார். எமது நாட்டில் அவ்வாறு செய்ய முடியாது.

பண்டுகாபய மன்னர் முதல் சிங்கள மன்னர்களே இலங்கையை ஆண்டுள்ளனர். எனவே, இது சிங்கள, பௌத்த தேசமாகும். எனினும், பௌத்த தர்மத்துக்கமைய நாம் அனைத்து சமயங்களையும், இனங்களையும் மதிக்கின்றோம். ஆதலால், இங்குள்ளவர்கள் எம்முடன் கைகோர்த்துப் பயணிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் எமது கரங்களை உடைத்துக் கொண்டு செல்ல முற்பட்டால் வாழ்வதற்கு தனியான உலகை தேடிக்கொள்ள நேரிடும். அதற்காகவே "மேர்வின் சில்வா" போன்றவர்கள் இருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கு, தெற்கு என்றில்லை இது ஒரு நாடு. பௌத்த சாசனம் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் செயற்பட்டால் இயற்கை நிச்சயம் தண்டிக்கும்." - என்றார்.

# சிறுவர்களிடையே அதிகரிக்கும் நோய்த்தாக்கம் பெற்றோருக்கு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தல்



பெரியவர்களிடையே பரவலாகக் காணப்படும் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் என்பன தற்போது சிறுவர்களிடையேயும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவ பீடத்தின் குழந்தைகள் மருத்துவத் துறையின் பேராசிரியர் ருவந்தி பெரேரா,

"12, 14 மற்றும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இவற்றினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களை இந்த நோய்களிலிருந்து பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிறுவர்களிடையே மனநிலை தொடர்பான நோய்களும் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.

எனவே பெற்றோர்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்."- என்றார்.

# வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பலவீனப்படுத்துகின்றதாம் இந்தியா

## துமிந்த நாகமுவ கண்டுபிடிப்பு

வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பலவீனப்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் திடீரென தோற்றம் பெற்றார். தற்போது அவரைக் காணவில்லை. தேர்தலில் போட்டியிடுவதும், அதன் பின்னர் மாயமாவதும்தான் அவருக்குரிய ஒப்பந்தம். அவர் தற்போது அரசியலில் இல்லை. தமிழ்ப் பொதுவேட்பாளர் எதற்காக வந்தார்? யாரின் நோக்கத்தை நிறைவேற்றக் களமிறங்கினார்?

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, யாழ்ப்பாணத்தில் வாக்குகள் சிதறியுள்ளன. தமிழ்த் தேசிய அரசியல் ஒரு விதத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அன்று வடக்குப் பிரச்சினையை பயன்படுத்தியே இந்தியா நாட்டுக்குள் நுழைந்தது. இன்று அதற்கான தேவைப்பாடு இல்லை. ஏனெனில் கொழும்பு அரசு எல்லாவற்றுக்கும் உடன்பட்டுள்ளது.

இவ்வாறு தெற்கு ஊடாக இந்திய தலையீடு வரும்போது



வடக்கில் எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் தமிழ்த் தேசிய அரசியலையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவைப்பாடு இந்தியாவுக்கு உள்ளது.

அர்ச்சுனா போன்றவர்களைக் கொண்டு வந்து என்ன செய்யப் போகின்றார்கள்? இலங்கையில் சுமார் 4 ஆயிரம் றோ உளவுப் பிரிவினர் உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன." - என்றார்.



# உடுப்பிட்டி மதுபானசாலைக்கு எதிரான வழக்கு 29 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ். வடமராட்சி, உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பை மீறி திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி, இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றக் கோரி அந்தப் பகுதியைச் சேர்ந்த 35 பொது அமைப்புக்களால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வருடம் மே மாதம் 5 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்காளிகளான பொது அமைப்புக்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

நேற்றைய தினமும் குறுக்கு விசாரணை நடைபெற்ற நிலையில் மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலுக்கான நிதியை வழங்க மறுத்து, அதனை வெட்டியதன் மூலம் இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆப்படித்தார்.

ஆரம்பிக்கப்பட்ட தேர்தல் நடத்தி முடிக்கப்படாமல் போனதால் 70 கோடி ரூபாவுக்கு மேல் விரயம் ஏற்பட்டதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்களில் மிகவும் சிக்கலானது உள்ளூராட்சித் தேர்தல்தான்.

பொதுத் தேர்தல் அல்லது மாகாண



சபை தேர்தல் போன்றவற்றுக்கு மாவட்ட ரீதியாக வாக்கு சீட்டுகளை அச்சிட வேண்டி இருக்கும். ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரை நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான வாக்குச் சீட்டுதான். சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டாலும் அதன் வாக்குச்சீட்டும் நாடு




முழுவதும் ஒன்றாகத்தான் இருக்கும்.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் அப்படி அல்ல. நாட்டிலுள்ள 340 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான வாக்குச் சீட்டு அச்சிட வேண்டியிருக்கும். அதாவது 340 ரக வாக்குச் சீட்டுகளை அச்சிட வேண்டும். அதுவும் வேட்பு மனுக்கள் தாக்கல் முடிவடைந்து வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னர் தனித்தனியாக ஒவ்வொரு ரக வாக்குச் சீட்டையும் ஒப்பு நோக்கி, சரியாகத் தயாரித்து, அச்சிட்டு, அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் வாக்களிப்பு நிலையங்களுக்கு சரியாக அனுப்பி வைக்க வேண்டும்.

தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரை பெரும் தலையடி தரும் தேர்தல் இதுதான்.

இந்தத் தேர்தலை அடுத்த 85 நாள்களுக்குள் நடத்தி முடித்து சில காலத்தில் மாகாண சபைத் தேர்தல்களை தேர்தல் ஆணையம் சந்திக்க வேண்டி இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு தேர்தல்களையும் – மாகாண சபைத் தேர்தலையும் உள்ளூராட்சி சபை தேர்தலையும் – ஒரே நாளில் நடத்தினால் என்ன என்று ஒரு யோசனை சில தரப்புகளினால் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் அது சாத்தியமற்றது என தேர்தல் ஆணையம் கூறுகின்றது.

இரண்டு தேர்தல்களிலும் மக்கள் வாக்களிப்பு மேற்கொள்வதற்கு ஒரே நாளில் மாலை நாலு மணி வரையான நேரம் போதுமானது அல்ல என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் குறிப்பிடுகிறார்.

\+ + +

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சர்ச்சைக்குரிய தமது சீன விஜயத்தை முன்னெடுத்த அதே சமயம், சீனாவின் போட்டி நாடான இந்தியா இங்கு சும்மா இருக்கவில்லை.

அந்தச் சமயத்தில் தானும் இலங்கையுடன் காத்திரமான ஊடாடல் பங்களிப்பில் இருப்பதாக இந்தியாவும் காட்டிக் கொள்கின்றது.

சீனத் தலைவருடன் இலங்கை அரசுத் தலைவர் சந்தித்துப் பேச்சு நடத்துகின்ற அதே சமயத்தில், கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் இங்கு எதிரணிகளின் பிரதான தலைவர்களோடு பேச்சு நடத்துகின்றார் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

முதலில் நாமல் ராஜபக்ஷவைச் சந்தித்த கொழும்புக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறார்.

இந்தச் சந்திப்புக்கள் இந்த சமயத்தில் முன்னெடுக்கப்பட்டமை அதன் உள்ளோட்டமாக ஒரு செய்தியைத் தந்து நிற்பது மறுக்க முடியாதது.

---

## இந்தியத் தூதரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பியுடன் பேச்சு நடத்தினார்.

இந்தியா – இலங்கை இடையேயான பன்முகத்தன்மை கொண்ட பிரச்சினைகள், வளர்ச்சித் திட்டங்கள், முதலீடுகள், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற துறைகள் குறித்து இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் என்று இந்தியத் தூதுவர் எக்ஸ் தள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நிலவும் வலுவான உறவைத் தொடர்ந்து பராமரிப்பது குறித்து விவாதித்ததாக நாமல் எம்.பி. முகநூல் பதிவில் பதிவிட்டுள்ளார்.

---

## உள்ளூராட்சி சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கட்சித் தலைமையகம் முன்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார சகல நாடுகளுடனும் இராஜதந்திர உறவுகளைப் பேண வேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்துக்கு எதிர்க்கட்சியும் ஆதரவளிக்கும். ஆனால், தற்போதைய அரசு கூறியதற்கும் செய்வதற்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் காணப்படுகின்றன.

மின்சாரக் கட்டணம், எண்ணெய் விலைக் குறைப்பு, எரிபொருள் விலை குறைப்பு, உர மானியம் போன்றவற்றைச் செய்ததாகக் கூறினாலும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பெரும் மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசு, அந்த ஆணையை மதித்து, மக்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை வழங்கி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்.

அரசு மக்களுக்கு இந்த பணியை ஆற்றாவிட்டால் எதிர்க்கட்சி மக்களுக்காக முன்நின்று, ஜனநாயக கட்டமைப்பில் குரல் எழுப்பும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூடியபோது, மக்கள் மீதான அரசின் அடக்குமுறைக்கு எதிராக நாம் முன்நிற்க வேண்டும் என ஆலோசிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். இதனை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம். இந்தத் தேர்தலில் அநுர அரசைத் தோல்வியடையச் செய்வோம்." – என்றார்.

---

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றேன். இதன்போதெல்லாம் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பிலும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் விரக்தியடைந்த நிலையில் எமது தொழிலாளர்கள் உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆகையினால் இதற்கு நிரந்தர தீர்வு காணவேண்டியஅவசியம்ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சந்திப்புகளின் போது கூட இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் தமது வாழ்க்கையில் நிர்க்கதி நிலை ஏற்படும் என்பதால் கடலில் குதித்துச் சாகப் போவதாக அவர்கள் சொல்லியிருந்தனர்.

அதுவும் இந்திய மீனவர்கள் ஒரு தடவை இரு தடவை என்றில்லாமல் தொடர்ந்து மாறி மாறி அத்துமீறி கடல் வளத்தை அழிப்பதுடன் 06

# பாதாள உலக செயற்பாடுகளை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## எதிர்கட்சித் தலைவர் கோரிக்கை



"இந்த ஆண்டின் கடந்த 16 நாள்களில் மாத்திரம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்."

– இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

"பொலிஸாரின் தரவுகளுக்கு அமைய, வெளிநாடு சென்றுள்ளவர்களில் 188 பேருக்கு சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 63 பேர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு பாதாள உலக குழு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்

இந்த பாதாள உலக செயற்பாடுகளை உடனடியாக ஒழிப்பதற்கும், வெளிநாடுகளில் இருந்து கொண்டு இவற்றை வழிநடத்தும் நபர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம்.

ஒரு நாட்டின் குடிமக்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டுவது எந்த ஒரு அரசாங்கத்தினதும் முதன்மைப் பணியாகும்.

துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட பரிதாபகரமான சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கும், அனைத்து பாதுகாப்புப் படைப் பிரதானிகளிடமும் கோருகின்றேன்." – என்றார்.

# குருந்தூர்மலை விவகாரத்தில் ரவிகரன் எம்.பி. உள்ளிட்ட மூவரும் அழைக்கும்வரை ஆஜராகத் தேவையில்லை என நீதிமன்று பணிப்பு





(பா.சதீசன்)

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக தற்போதைய வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட மூவரும் நீதிமன்றால் அழைப்பு விடுக்கும்வரை ஆஜராகத் தேவையில்லை என முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை இந்தவழக்குடன் தொடர்புடைய ஆஜராகாத நபர்களை மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று எடுத்து கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

குருந்தூர்மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்டமைக்காக தொல்லியல் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில், நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்று, விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொல்லியல் திணைக்களத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பகத்தில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் இ.மயூரன் உள்ளிட்ட மூவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான், மன்றில் ஆஜராகிய மூவரும் நீதிமன்றால் அழைப்பு விடுக்கும்வரை, நீதிமன்றில் ஆஜராகத் தேவையில்லை என உத்தரவிட்டார்.

அத்தோடு இந்த வழக்குடன் தொடர்புடைய ஆஜராகத் தவறியோரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றால் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்றொழில் உபகரணங்களையும் அழித்துச் செல்வதாகவும் கூறிகின்றனர்.

இப்போது கடற்றொழில் அமைச்சராக நான் இருப்பதால் தமது நிலைமைகளை மக்கள் என்னிடம் கூறுகின்றார்கள். ஆகையினால் எமது மக்கள் பாதுக்கப்படுகின்ற நிலைமையை உணர்ந்தும் எமது வளம் அழிக்கப்படுவதைத் தெரிந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஆகையினால் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் உரிய நடவடிக்கையை விரைந்து முன்னெடுக்க வேண்டிய பொறுப்பும் எங்களிடத்தே இருக்கின்றது. அதற்கமைய நிச்சயம் இதற்குரிய நடவடிக்கையை எடுப்போம் என்பதை மக்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

ஏனெனில் எங்களுக்குச் சொந்தமான கடல் வளத்தை மாத்திரமல்ல கடலையே பாலைவனமாக்குகின்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இதற்கு இந்தியாவுடன் பேசி முதலில் உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டும். அதற்குரிய சட்டங்களை அவர்களும் கொண்டு வர வேண்டும். அதேநேரம் கடந்த காலங்கள் போன்று அல்லாமல் இப்போது அத்துமீறலைத் தடுக்கின்ற அதேவேளையில் அதனையும் மீறி வருகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையையும் எடுத்து வருகின்றோம்.

மேலும் நாட்டின் ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாட்டுக்கு வந்தவுடன் இங்குள்ள படை அதிகாரிகளுடன் பேசி இன்னும் தீவிர நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். அதனூடாக இந்தியா மீனவர்களின் அத்துமீறலைக் குறைக்க அல்லது தடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

குறிப்பாக உமது கடல் எல்லையில் கடற்படை ஊடாக தீவிர ரோந்து நடவடிக்கை மேற்கொண்டு தடுப்போம்.

இந்தியா எமது தொப்புள் கொடி உறவுதான். அந்த இந்தியாவுடன் எங்களுக்குத் தனிப்பட்ட கோபம் எதுவும் இல்லை. ஆனால், எமது மக்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் தமிழ்நாடால் மட்டும் தனிப்பட்ட முறையில் முன்னெடுக்கப்படும் இந்த அத்துமீறல்களே எமக்குப் பாரிய பிரச்சினையாக உள்ளது.

ஆகையினால் இதனைப் பேசி தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம். அதற்கான உடன்பாடுகள் எட்டப்படும் வரையில் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம்." – என்றார்.






# ஒரு சில மருத்துவர்களின் பொறுப்பற்ற செயல்களால் மக்களின் மனதில் மாற்றம்

## வடக்கு மாகாண ஆளுநர் ஆதங்கம்

"இன்றும் சில மருத்துவர்களைக் கடவுள்களாகவே மக்கள் பார்க்கின்றனர். ஒரு சில மருத்துவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் மக்களின் அந்த எண்ணங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. உயிரைக் காக்கும் பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள் என்பதை மனதிலிருந்து சேவையாற்ற வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் அண்மையில் பரவிய எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் செயற்பாடு சிறப்பாக அமைந்ததாக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் இதன்போது குறிப்பிட்டார். மேலும், வடக்கு மாகாணத்தில் தாதிய உத்தியோகத்தர்களின் நிலுவைக் கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. நடப்பு ஆண்டுக்குரிய திட்டங்கள் அனைத்தையும் இந்த மாதத்துக்குள் தயாரித்து முடிக்குமாறு அறிவுறுத்திய ஆளுநர், ஒக்டோபர் மாதத்துக்குள் அவை செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும் கண்டிப்பாகக் குறிப்பிட்டார்.

சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி வி.பி.எஸ்.டி.பத்திரண, வடக்கில் முழு இயங்கு நிலையில் செயற்படாத மாங்குளம், கிளிநொச்சி, பருத்தித்துறை மருத்துவமனைகளில் வெளிநாட்டு நிதியுதவியில் அமைக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை நிலையங்களை விரைவில் இயக்குவதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. அதனை உடனடியாகச் செயற்படுத்துவதற்கான சாதகமான நிலைமைகள் தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் பணித்ததுடன், விரைவில் இது தொடர்பான கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறும் பணித்தார்.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், சான்று பெற்ற பாடசாலை மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான கல்வி வசதியை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கையை முன்வைத்தார். அதனை உடனடியாகச் செயற்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார். மேலும் நியதிச் சட்ட ஏற்பாடுகள் போதியளவு இல்லாமையால் கொள்கை ஆவணத்துக்கான அனுமதிக்கான கோரிக்கையையும் அவர் ஆளுநரிடம் முன்வைத்தார்.

இதேவேளை, சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்திய கலாநிதி தில்லையம்பலம் சர்வானந்தன், ஆயுள்வேத மருத்துவமனைகளின் தேவைப்பாடுகள் தொர்பில் சுட்டிக்காட்டினார். அத்துடன் சுற்றுலாவிகளை இலக்கு வைக்கும் வகையில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இருக்கின்ற மருத்துவ வசதிகளை ஒழுங்குபடுத்தும் வகையில் வேலணை மருத்துவமனை மற்றும் ஊர்காவற்றுறை மருத்துவமனை என்பனவற்றை ஒருங்கிணைந்து செயற்படுத்துவது தொடர்பான யோசனை சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளரால் முன்வைக்கப்பட்டது. முன்னோடித் திட்டமாக இதனைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விதைத்த வினை

நாட்டில் இடம்பெற்றுவரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தயவு கூர்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தையும் மற்றும் அனைத்து பாதுகாப்புப் படைப் பிரதானிகளையும் கேட்டுக்கொள்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்துடன், கடந்த 16 நாள்களில் மாத்திரம் ஐந்து துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றமை பாரதூரமான நிலைமை என்பது முதலில் சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் உயிரிழக்க, மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாட்டின் சிவில் பிரஜைகள் தமது அன்றாட நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பயங்கரமான ஓர் அச்ச சூழல் நாடெங்கும் கட்டவிழ்ந்துள்ளது.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகம் உட்பட்ட மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதாள உலகக் குழுவினரே இந்த வன்முறை வெறியாட்டங்களுக்குச் சூத்திரதாரிகள் என்பது நாடறிந்த உண்மை.

நேற்று மன்னாரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் படுகொலை சம்பவத்தின் மூலமும் போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பான படுகொலைகளின் தொடர்ச்சி என்பதுதான் பல மட்டங்களிலும் பேசப்படும் விடயம்.

இந்தப் பாதாள உலகம் குழுக்களின் செயற்பாடுகளை 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் நடவடிக்கைகள்' என்ற பெயரில் பொலிஸார் அடையாளப் படுத்தி நிற்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்த பின்னரும், சிவில் உரிமைகளுக்காகவும் மக்களின் நலனுக்காகவும் போராடுபவர்கள் மீது நாட்டின் மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவி விடும் பொலிஸாரும் பாதுகாப்பு தரப்பினரும் பாதாள உலகம் குழுவினரின் அட்டகாசங்களை 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை புரியும் தரப்புக்களின் நடவடிக்கை' என்ற பெயரில் புள்ளி விவரம் குறிப்பிட்டுச் சுட்டிகாட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவ்வளவு தான்.

இந்தக் குற்றவாளிக் கும்பல்களை பிடிப்பதற்கான நடவடிக்கை அல்லது அடக்குவதற்கான செயற்பாடு காத்திரமான முறையில் இதுவரை நாட்டில் எடுக்கப்படவே இல்லை என்பது தான் உண்மை. அதற்கான விசேட சட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

யுத்தம் நாட்டில் முடிவடைந்த பின்னரும் அப்பாவி பொதுமக்கள் மீது கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவிவிடும் பாதுகாப்புத் துறையினர், இந்தப் பாதாள உலகக் கும்பல்களைக் கையாள்வதில் மாத்திரம் வழமையான சட்ட விதிகளையும் ஒழுங்குகளையும், வழமையான மிதவாதப் போக்கில் கையாளுகின்றமைதான் ஆச்சரியத்திற்குரியது.

கட்டமைக்கப்பட்ட படை அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்தை கொடுங்கரம் கொண்டு மோசமாக செயல்பட்டு, அழித்த பௌத்த - சிங்களப் பேரினவாதத்தினால் தம் மத்தியில் ஊடுருவி இருக்கும் பாதாள உலகக் குழுக்களை அடக்க முடியாமல் இருப்பது வியப்புக்குரியது.

ஒரு வகையில் பார்த்தால் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுதமுனையில் அடக்குவதற்காக 'அரச பயங்கரவாதத்தை' கட்டவிழ்த்து விட்ட கொழும்பினால், அதே அரச பயங்கரவாதத்தின் பக்க விளைவாக உருவான பாதாள உலகம் குழுக்களை அடக்க முடியாமல் இருப்பது வியப்பன்று.

அரசு பயங்கரவாதம் என்ற வினையை விதைத்த அரசு இப்போது அதற்கான அறுவடையை எதிர்கொண்டு சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றது.





### பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவை நடத்தும்

# இ.போ.ச., தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடன் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவை நடத்தும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடான கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் அரசு அதிபர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளில் ஏற்படும் தடங்கல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. கொழும்புத்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தியின் நேர ஒழுங்குகள் சீர் செய்யப்பட்டது.

2. மருதங்கேணி, கட்டைக்காட்டில் இருந்து உடுத்துறைக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் சேவை மற்றும் உசன், கெற்பெலி பகுதிகளில் இருந்து சாவகச்சேரி நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களின் பாடசாலை நேரத்துக்கு அமைவாக நேர ஒழுங்குகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

3. அச்சுவேலி, இராசபாதை ஊடாக யாழ்ப்பாணம் நகருக்கு வரும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் பாடசாலை மாணவர்களுக்கான இடையூறு ஏற்படாத



வகையில் பஸ் சேவை நடைபெறுவதனை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு உறுதி செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலாளர், இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் மற்றும் சாலை முகாமையாளர், தனியார் சிற்றூர்தியின் சங்கத் தலைவர் மற்றும் உரிமையாளர்கள், சிறுவர் மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கடந்த வருடம் சுற்றுலாப் பயணிகளால் 3.17 பில்லியன் டொலர் வருமானம்



கடந்த வருடம் நாட்டின் சுற்றுலா வருமானமாக 3.17 பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 53.2 சதவீத வளர்ச்சியாகும் என இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

2023ஆம் ஆண்டு சுற்றுலா வருமானமானது 2.0 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

கடந்த வருடம் 20 இலட்சத்து 53, 465 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்.

இந்த வருடம் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




# சீன முதலீட்டாளர்களை சந்தித்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீனாவிற்கான 4 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தின் மூன்றாவது நாள் நேற்று.

ஜனாதிபதி சீனாவின் அரச, தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள முதலீட்டு அமர்வில் நேற்று முற்பகல் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இந்த அமர்வு இடம்பெறுகின்றமை விசேட அம்சமாகும்.

சீனா டியான்யிங் இன்கோபரேசன் (CNTY- China Tianying Inc),

வரையறுக்கப்பட்ட சைனா ஹார்பர் பொறியியல் நிறுவனம் (China Harbour Engineering Company Ltd), வரையறுக்கப்பட்ட சீனத் தொலைத்தொடர்பு நிர்மாண கம்பெனி லிமிடெட் (China Communications Construction Company Ltd),

சீனா பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம் (China Petrochemical Corporation -SINOPEC Group),

வரையறுக்கப்பட்ட மெடலர்ஜிகல் கோபரேசன் ஒப் சைனா நிறுவனம் (Metallurgical Corporation of China Ltd),

சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம் (China Civil Engineering Construction Corporation),

வரையறுக்கப்பட்ட சைனா எனர்ஜி இன்டர்நெசனல் குழும நிறுவனம் (China Energy International Group Company Ltd),


குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் (The Guangzhou Public Transport Group) உள்ளிட்ட பல முன்னணி சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டு அமர்வில் பங்கேற்றுள்ளன.

இந்த நிகழ்வில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதர் மஜிந்த ஜெயசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.













# மன்னார் நீதிமன்றின் முன் துப்பாக்கிச் சூடு; மன்னார் பொலிஸார்தான் முழுப் பொறுப்பு

## ஏற்க வேண்டும் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

**(எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் நேற்றைய தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ள சம்பவத்திற்கு மன்னார் பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகம் உண்மையிலேயே கண்டிக்கத்தக்க, காட்டு மிராண்டித்தனமான ஒரு விடயமாகும்.

இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிஸார் முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டும்.

நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக அந்த நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாக படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப்படுகிறது .

இந்த விடயத்தை கடந்த அரசாங்கத்தில் மக்கள் பாதுகாப்புத் தொடர்பாடல் அமைச்சரோடு நான் நேரடியாகப் பேசியிருந்தேன். இப்போது துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஏ.கே 47 பாவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது எந்த வகையான துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியப் படவில்லை. இந்த துப்பாக்கி பிரயோகம் நொச்சிகுளம் மக்களை பார்த்துத் தான் பிரயோகிக்கப்படுகிறது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மன்னார் பொலிஸாருடைய மெத்தனப் போக்கும் இதில் அடங்கியிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழலிலே மீண்டும் மன்னார் நீதி மன்றத்திற்கு முன் இந்தப் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இது கண்டிக்கத்தக்கது.

இவ் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியினது கவனத்திற்கும், நாடாளுமன்றத்தினது கவனத்திற்கும் முக்கியமான விடயமாக கொண்டு வரவுள்ளேன்.

இது தொடர்ச்சியாக நடைபெறுகிற விடயமாக இருக்கிறது.

போன உயிர்களை மீளப் பெற முடியாது. துப்பாக்கி பிரயோகத்தால் உயிர் நீத்தவர்களின் குடும்பங்கள் பல அந்த கிராம மக்கள் அச்சத்தோடு வாழுகின்ற நிலைமை தொடர்கின்றது.

ஆகவே இதன் முழுப்பொறுப்பையும் பொலிஸார் எடுக்க வேண்டும். இந்தச் சம்பவத்திற்கு காரணம் பொலிஸாருடைய கவனயீனம் - அசமந்தப் போக்கு - என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். முப்படைகள் அங்கே பாதுகாப்பு நடவடிக்கையில் இருப்பது போன்று காட்டிக்கொண்டுள்ள நிலையில் இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது பல கேள்விகளை எழுப்புகிறது. இவ்வாறான சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டியவை..

சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். இதற்கான குழு அடங்கிய புலனாய்வு துறை நடவடிக்கைகளை பொலிஸார் உடனடியாக ஆரம்பித்து செயலில் இறங்க வேண்டும். மன்னாரில் உள்ள பொலிஸாரை மட்டும் வைத்து இதற்குரிய நடவடிக்கைகளை செய்து கொள்வது முடியாத காரியமாகும். எனவே கொழும்பில் இருந்து விசேட குழு அடங்கிய பொலிஸார் வரவழைக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் உயிர்நீத்தவர்களுக்கு எனது அஞ்சலியை செலுத்துகிறோம். பொலிஸார் விசாரணை நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கை. - எனத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் காணாமல் போனமை குறித்து விசாரணை

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 29 வாகனங்கள் காணாமல் போனமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நேற்று நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

கோட்டை நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து குற்றப்புலனாய்வு திணைக்களம் சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.




# அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவரால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

சுகாதார சேவைக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வெளியிடுதல் தொடர்பாக, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் மனுஜ் சி வீரசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைக் கையளித்துள்ளார்.

நேற்று முன்தினம் கையளிக்கப்பட்ட அந்த முறைப்பாட்டில் அரசாங்க சுகாதார சேவைகளை சீர்குலைக்க அல்லது சீர்குலைக்கும் நோக்கத்தில் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விவகாரம் குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



# காகித தொழிற்சாலையை மீண்டும் திறக்கத் தீர்மானம்

வாழைச்சேனை காகித தொழிற்சாலையின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

பழுதடைந்த இயந்திரங்கள் சரி செய்யப்பட்ட பின்னர் காகித தொழிற்சாலையின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு, வாழைச்சேனை காகித தொழிற்சாலையை மூடுவதற்குப் பதிலாக, பழுதடைந்த இயந்திரங்களை சரி செய்வதற்காக வேலைகளை முன்னெடுக்கத் தீர்மானித்தது.

மேற்படி தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் 1956 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் என்பதால் பழுதுபார்க்கும் வேலைத்திட்டத்திற்காக சுமார் 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்று கணிக்கப்பட்டது.

இந்த தொழிற்சாலையில் இயந்திரங்களை புதுப்பித்தால், ஒரு நாளைக்கு 5 தொன் காகிதம் உற்பத்தி செய்வதன் மூலம் மாதத்திற்கு 22 மில்லியன் ரூபா இலாபம் பெற முடியும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# மின்கட்டணத் திருத்தம்: இறுதித் தீர்மானம் இன்று

2025ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கான மின்கட்டண திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று அறிவிக்கப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறை திருத்தமின்றி தற்போதைய அளவிலேயே மின்கட்டணத்தைப் பேணுவதற்கு இலங்கை மின்சார சபை பரிந்துரைத்துள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் கோரியுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இறுதித் தீர்மானத்தை இன்று அறிவிக்கவுள்ளது.



# கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் அதிகரிப்பு

கொழும்பு பங்குச் சந்தையின் வர்த்தக நடவடிக்கை நேற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 63.58 புள்ளிகளாக அதிகரித்து 16,215.93 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன், எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 பங்கு விலைச் சுட்டெண் 12.85 புள்ளிகளால் அதிகரித்து 4,918.4 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்த புரள்வானது நேற்று 5 பில்லியன் ரூபாயாக பதிவானது.





# இலங்கை - இந்தியா இடையில் 2 புரிந்துணர்வு உடன்படிக்கைகள்

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் 2 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

மலையகப் பகுதிகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 60 ஞஅயசவ வகுப்பறைகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயஸ்ர்தானிகர் சந்தோஷ் ஜா பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அதற்கமைய நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 48 பாடசாலைகளுக்கும் கண்டி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட தலா 6 பாடசாலைகளுக்கும் ஞஅயசவ வகுப்பறைகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இதேவேளை சட்டம் ஒழுங்கை பேணும் செயற்பாடுகளில் இலங்கை பொலிஸாரின் முக்கிய தேவையை நிறைவேற்றும் நோக்கில் இந்திய அரசினால் வட மாகாண பொலிஸ் நிலையங்களுக்கு 80 கெப் வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆர்.பி.செனவிரத்ன ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.







# ஜல்லிக்கட்டில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் உடலை வாங்க மறுத்து உறவுகள் போராட்டம்

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டி கடந்த திங்கள் கிழமை இடம்பெற்றது. இதில், மதுரை விளாங்குடியைச் சேர்ந்த நவீன்குமார் (வயது 23) என்பவர் மாடுபிடி வீரராக களம் இறங்கினார். போட்டியில் காளை முட்டியதில் அவர் பலத்த காயமடைந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரது உடலை பிரேதப் பரிசோதனைக்கு பிறகு உறவினர்களிடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

ஜல்லிக்கட்டில் உயிரிழந்த நவீன் குமாருக்கு அரசு நிவாரணம் வழங்கக் கோரி அவரது உறவினர்கள் உடலை வாங்க மறுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலமேடு ஜல்லிக்கட்டு நேற்று முன்தைனம் நிறைவுபெற்ற நிலையில் நேற்று அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெறுகிறது. இந்தப் போட்டியை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைக்கிறார்.

இந்நிலையில், ஜல்லிக்கட்டில் உயிரிழந்த மாடுபிடி வீரர் உடலை வாங்க மறுத்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடுவது, ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு நெருக்கடியையும், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையையும் ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது.

அதனால், மாவட்ட நிர்வாக அதிகாரிகள், பொலிஸார் வீரரின் உறவினர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்நிலையில் உயிரிழந்த நவீன் குமாரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளதோடு, அவரது குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபா முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம்; இந்தியா வரவேற்புத் தெரிவித்தது

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பினர் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் கருத்து வெளியிடுகையில்,

"இந்த ஒப்பந்தம் காசா மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான மனிதாபிமான உதவிகளை வழங்கும். காசாவில் போர் நிறுத்தம், பணயக்கைதிகள் விடுதலை குறித்த ஒப்பந்தத்தின் அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம்.

அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்கவும், போர் நிறுத்தம் செய்யவும், பேச்சுவார்த்தை பாதைக்குத் திரும்பவும் நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது

# நடிகர் சைப் அலிகானை கத்தியால் குத்தியவர் அடையாளம் காணப்பட்டார்; பொலிஸ் தகவல்

நடிகர் சைப் அலி கானை கத்தியால் குத்தியவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் அவரை கைது செய்ய 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் மும்பை போலிஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மண்டலம் 9 இன் துணை பொலிஸ் ஆணையர் தீட்சித் கெடம்,

"குற்றம் சாட்டப்பட்டவர்கள் படிக்கட்டுக்கள் வழியாக வீட்டிற்குள் நுழைந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது வரை நடத்தப்பட்ட விசாரணையில் இது ஒரு கொள்ளை முயற்சி என்று தெரிகிறது. குற்றம் சாட்டப்பட்ட நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவரைக் கைது செய்ய 10 குழுக்கள் களத்தில் உள்ளன. வெவ்வேறு திசைகளில் இந்த குழுக்கள் செயல்படுகின்றன. குற்றம் சாட்டப்பட்டவரை விரைவில் கைது செய்ய நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். அவர் கைது செய்யப்பட்டவுடன், கூடுதல் விவரங்களை வெளியிட முடியும்." என தெரிவித்துள்ளார்.



முன்னதாக சைப் அலி கானின் மகன் ஜஹாங்கீரின் வீட்டில் உள்ள படுக்கையறையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என பாந்த்ரா பொலிஸ் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வீட்டு வேலை செய்யும் அரியாமா பிலிப்ஸ் என்கிற லிமா, எச்சரிக்கை விடுத்ததை அடுத்து, நடிகர் சைப் அலி கான் தலையிட்டுள்ளார் எனவும் அப்போது, அடையாளம் தெரியாத நபர் சைப் அலி கானை கூர்மையான பொருளால் தாக்கி காயப்படுத்தியுள்ளார் எனவும் இந்த சம்பவத்தில் வீட்டு வேலை செய்யும் பெண்மணியும் காயமடைந்துள்ளார் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டார்கெட், சேஸர் விண்கலங்கள் வெற்றிகரமாகத் தரையிறங்கின





விண்வெளியில் இரண்டு ஆளில்லா விண்கலங்களை வெற்றிகரமாக இணைத்த உலகின் நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இதற்கு முன்னர் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவால் ஆளில்லா விண்கலங்கள் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

கடந்த டிசம்பர் 30 ஆம் திகதி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இரண்டு சிறிய விண்கலங்களை தாழ் பூமி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது.

டார்கெட் மற்றும் சேஸர் எனப் பெயரிடப்பட்ட இரண்டு விண்கலங்களும் நேற்று வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அமெரிக்காவில் உள்ள பணக்காரர்களிடையே ஆபத்தான அதிகாரக் குவிப்பு உருவாகின்றது

## ஜோ பைடன் எச்சரிக்கை விடுக்கின்றார்



அமெரிக்காவில் உள்ள ஒரு சில பணக்காரர்களிடையே, ஆபத்தான அதிகாரக் குவிப்பு நிலை உருவாகி வருவதாக ஜனாதிபதி ஜோ பைடன் அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிபதவியிலிருந்து இன்னும் ஒரு சில நாள்களில் விலகவிருக்கும் ஜோ பைடன், ஓவல் அலுவலகத்திலிருந்து நாட்டு மக்களுக்கு பிரியாவிடை உரையை நேற்று முன்தினம் ஆற்றினார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,


"இன்று அமெரிக்காவில் மிகப்பெரிய சொத்துகளுடன், அதிகாரம் மற்றும் செல்வாக்குடன் தன்னலக்குழு ஒன்று உருவாகி வருகிறது. இது நாட்டின் ஜனநாயகத்தையும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தையும் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து முன்னேறுவதற்கான வாய்ப்புகளுக்கு எதிரான அச்சுறுத்தலாக நிற்கிறது.

தற்போது இவர்கள் மூலம் பரப்பப்படும் தவறான தகவல்களால் அமெரிக்க மக்கள் அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். செல்வந்தர்களிடையே குவியும் அதிகாரம், அதிகார துஷ்பிரயோகத்துக்குத்தான் வழிவகுக்கும்.

மறுபக்கம் ஊடக சுதந்திரமும் மறுக்கப்படுகிறது, உண்மையான செய்திகளை வெளியிடுவோர் மெல்ல காணாமல் போய்விடுகிறார்கள். பொய்களால் உண்மை மறைக்கப்படுகிறது.

நான் இந்த நாட்டின் மீது என்னுடைய முழு அன்பையும் அர்ப்பணித்திருக்கிறேன். அதற்கு ஈடாக, அமெரிக்க மக்களும் தங்களுடைய முழு அன்பை எனக்கு செலுத்தினர்கள், அவர்களது ஆசியைப் பெற்றுள்ளேன்." – என்றார்.

# புத்தர் சிலை வடிவில் டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பின் உருவத்தை புத்தர் போல உருவாக்கியுள்ளார் சீனாவைச் சேர்ந்த பீங்கான் உருவ வடிவமைப்பாளரும் சிற்பியுமான ஹாங் ஜின்ஷி.

ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ள நிலையில், புத்தர் வடிவிலான ட்ரம்ப் சிலைகள் உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளன.

சீனக் கைவினைக் கலைஞர் ஹாங் ஜின்ஷியின் சிலைகள், 140 டொலர்கள் முதல் 2,700 டொலர்கள் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கலை மற்றும் அரசியலை இணைக்கும் இந்த பீங்கான் சிலைகள், உலகெங்கிலும் உள்ள சிலை சேகரிப்பாளர்களிடம் அதிக ஆர்வத்தை ஈர்த்துள்ளன.

999 முதல் 20,000 யுவான்களுக்கு அவற்றின் அளவைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்துள்ளார் ஹாங் ஜின்ஷி. இந்த சிலைகள் அமேஸான் மற்றும் சீன இணையதள விற்பனை நிறுவனமான டெமுவில் விற்பனைக்கு உள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 17.01.2025




இன்று உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். சவாலான சூழ்நிலைகள் காரணமாக இன்று சமநிலை இழக்க நேரலாம். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையுடன் கவனமாக பணியாற்ற சில விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்.

பணியில் காணப்படும் பதற்றம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய சூழ்நிலைகளை தவிர்த்தல் நல்லது. சகஜமான அணுகுமுறையால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. விரும்பியது கிடைக்கும் சூழ்நிலை காணப்படவில்லை. வளைந்து கொடுத்து போவதன் மூலம் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்கள் பணிகளை ஒழுங்கு முறையாகத் திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்களின் குழப்பமான மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக காணப்படவில்லை. பண இழப்புக்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும். தலைவலி அல்லது முதுகுவலி ஏற்படலாம்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். இலக்குகளை அடைவதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் நிறைந்து காணப்படும். இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் உங்கள் தனித் திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல் திறனில் இது பிரதிபலிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர்பாராத பண வரவுகள் காணப்படும்.

ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் அணுகுமுறையில் வேகம் கூடாது. உங்கள் செயல்களை திட்டமிடுவதன் மூலம் வெற்றி காணலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அதனால் நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

உங்களின் எதிர்மறை உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே இதனை தவிர்த்தல் நலம்.

பணப்புழக்கம் சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இன்று உங்கள் ஆற்றல் குறைந்து காணப்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். கூடுதல் பொறுப்புகளுக்கு நேரம் செலவழிக்க நேரும். மனதில் குழப்பங்கள் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். நன்மையான பலன்கள் கிடைக்க திட்டமிடுதல் நல்லது.

உங்கள் துணையுடன் கவனமாக உரையாட வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் உறவுப் பிணைப்பு வலுப்படும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண் எரிச்சல் ஏற்படலாம். கண்களை வருத்திக் கொள்ளாமல் இருப்பது நல்லது. உற்சாகமான மன நிலையை பராமரிக்க வேண்டும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகள் ஏற்படாமல் இருக்க ஆழ்ந்து யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியாதபடி ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றம் திருப்திகரமாக இருக்காது.

உங்கள் துணையுடன் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்றைய நாளை அமைதியாக கழிக்க இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் பிரியமானவருடன் உங்கள் அணுகுமுறையை மாற்றிப் பழகுங்கள்.

தேவையற்ற செலவினங்கள் இன்று காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தி சிக்கனமாக இருப்பது நல்லது.




இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவதற்கான உறுதியுடன் காணப்படுவீர்கள். உங்களின் நம்பிக்கை உணர்வு உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நெருக்கம் காணப்படும். உங்களின் பரஸ்பரமான பேச்சில் அது வெளிப்படும். இருவரும் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் கையில் இருக்கும் உபரி பணத்தைக் கொண்டு நீங்கள் நீண்ட கால திட்டம் ஒன்றை தீட்டலாம்.

மனதில் இருக்கும் திருப்தி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுபவித்து மகிழும் நாள். உங்கள் குழந்தைகளைப் பற்றி பெருமைப்படுவீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும்.

புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியாற்றுவதை எளிதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.உங்கள் துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடு முயற்சிக்கு இன்றைய நாளை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.01.2025




எதிர்பாராத நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும். சவால்களை சந்திக்க பொறுமை தேவை.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறமையுடன் செயலாற்ற மிகுந்த கவனம் தேவை.

உங்கள் துணையுடன் பேசும் போது களிப்பான மனநிலையில் எற்றுக் கொள்ள வேண்டும். அவரின் வார்த்தைகளை உன்னிப்பாக கேட்பதன் மூலம் உறவில் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். எதிர்கால பாதுகாப்பு கருதி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்கச் சத்தான உணவை உட்கொள்ளவேண்டும். இன்று அமைதியின்மையும் சோர்வும் காணப்படும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்புக்குக் கூடுதல் பணம் ஊக்கத் தொகையாக கிடைக்கும்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றப் பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்படும்.




இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். உங்கள் முயற்சியில் வெற்றிகளை எளிதாக அடையலாம். இதனால் உற்சாகமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

சக பணியாளர்கள் ஆதரவாகாவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் விதமாக உங்கள் செயல்திறன் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் பராமரிக்க முடியும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உபரி பணத்தை நல்ல விடயங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நலமாய் உணர்வீர்கள்.

# உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சடலம்




மட்டக்களப்பு – காத்தான்குடி – கல்லடி பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கல்லடியைச் சேர்ந்த 48 வயதான பொதுசுகாதார பரிசோதகர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சடலம் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் அப்பகுதியிலேயே வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.